***கவனிக்க.-*** *2016.03.24 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II மற்றும் பகுதி IV(அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 1961 - 2016 අප්‍රේල් මස 01 වැනි සිකුරාදා - 2016.04.01**

*1961 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 01 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 452 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 458 |


***கவனிக்க.-*** *''மாத்தறைப் பருவம்'' அமைப்பு கூட்டிணைத்தல் சட்டமூலம் 2016, சனவரி 01 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.*

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2016, ஏப்பிறல் மாதம் 22 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2016, ஏப்பிறல் மாதம் 08 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**டபிள்யூ. ஏ. ஏ. ஜீ. பொன்சேக்கா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2016 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*
இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

*1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.*

*1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).*

*1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகாண் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.*

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

*2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.*

*2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.*

*அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.*

*2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.*

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

*3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-*

*3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகாண் நிலையிலேயே இருக்கும். தகுதிகாண் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.*

*3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.*

*3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.*

*3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகாண் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.*

*3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.*

*3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.*

*3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகாண் நிலையில் இருக்க வேண்டியதில்லை.*

*3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.*

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

*4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.*

*4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.*

*4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.*

*4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.*

**5. யுத்த சேவைச் சலுகை :**

*5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.*

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

*6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.*

*6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.*

*6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.*

*6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.*

*6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.*

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

*7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.*

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

*இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.*

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

*1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.*

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப்படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை ஆணைக்குழுவால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி - திருகோணமலை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்டச் செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2016, வைகாசி மாதம் 02 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2016, மாச்சு 13.

### அட்டவணை

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| திருகோணமலை | கோமறன்கடவல | கட்டுக்குளம்பத்து மேற்கு மதவாச்சிய பிரிவில் பிறப்பு, இறப்பு மற்றும் விவாகப் (பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், திருகோணமலை |

4-158

---

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி - பதுளை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்டச் செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2016, மே மாதம் 02 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2016, மார்ச் 11.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| பதுளை | சொரணாத்தோட்டை | வியலுவ பிரிவின் மேலதிக விவாக (கண்டிய/பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், பதுளை |

4-267

---

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

### விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி - புத்தளம் மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்டச் செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2016, வைகாசி மாதம் 02 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2016, மாச்சு 15.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| புத்தளம் | மஹவெவ | மாரவிள பிரிவில் பிறப்பு, இறப்பு மற்றும் பிடிகல் கோரளை தெற்குப் பிரிவில் விவாக (பொது/கண்டிய) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், புத்தளம் |

4-268

---

**பதிவாளர் நாயகம் திணைக்களம்**

முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி – திருகோணமலை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள முஸ்லிம் விவாக பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய முஸ்லிம் விவாகப் பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக முஸ்லிம் ஆண்கள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்டச் செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2016, வைகாசி மாதம் 02 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2016, மாச்சு 14.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| திருகோணமலை | மூதூர் | மூதூர் பிரிவில் மேலதிக முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், திருகோணமலை |

4-157

---

**நீதி அமைச்சு**

சட்ட ஆணைக்குழுத் திணைக்களத்தின் நிறைவேற்றுச் சேவைகள் வகுதியின் I ஆம் தரத்தின் செயலாளர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல் – 2016

சட்ட ஆணைக்குழுத் திணைக்களத்தின் நிறைவேற்றுச் சேவைகள் வகுதியின் I ஆம் தரத்தில் நிலவுகின்ற வெற்றிடத்திற்காக தகுதியான ஒருவரைத் தெரிவுசெய்துகொள்வதற்காக அமைச்சரவையின் பணிப்பின் பேரில் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவ்வறிவித்தலின் இறுதியில் உள்ள மாதிரிப் படிவத்திற்கமைவாக தயார்செய்யப்பட்ட விண்ணப்பங்கள் பின்வரும் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னராகவோ "செயலாளர், நீதி அமைச்சு, மீயுயர் நீதிமன்றக் கட்டிடத் தொகுதி, கொழும்பு 12" என்னும் முகவரிக்கு கிடைக்கக்கூடியவாறு பதிவு அஞ்சலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். கடித உறையின் இடது மேல் மூலையில் "சட்ட ஆணைக்குழுத் திணைக்களத்தின் நிறைவேற்றுச் சேவைகள் வகுதியின் I ஆம் தரத்தின் செயலாளர் பதவிக்காக ஆட்சேர்ப்புச் செய்தல்" எனத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

**விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி 2016.04.29 ஆகும்.**

**குறிப்பு.**– விண்ணப்பமொன்று அல்லது அது சம்பந்தப்பட்ட ஆவணமொன்று அஞ்சலில் காணாமற் போனதாக அல்லது தாமதமாகியதாக செய்யப்படுகின்ற முறைப்பாடுகள் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது. இறுதித் திகதி வரை விண்ணப்பங்களைத் தாமதம் செய்வதனால் ஏற்படுகின்ற நட்டங்கள் விண்ணப்பதாரர்களால் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

1. **சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்யும் முறை.**– அமைச்சரவையின் அங்கீகாரத்தின்படி நியமிக்கப்படுகின்ற நேர்முகப் பரீட்சைச் சபையொன்றின் மூலம் நடாத்தப்படுகின்ற கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையொன்றின் மூலம் பெற்றுக்கொள்கின்ற புள்ளிகளின் திறமையின் அடிப்படையில் தெரிவுசெய்யப்படுவர். நியமனம் நடைமுறைக்கு வரும் திகதி அமைச்சரவையின் கட்டளைப்படி தீர்மானிக்கப்படுகின்றது.

2. **சேவை நிபந்தனைகள் :**

(i) இப்பதவி நிரந்தரமானது. ஓய்வூதியமுடையது.

(ii) இப்பதவியில் நியமனம் பெறும் உத்தியோகத்தர் ஓராண்டு பதிற்கடமை புரியும் காலமொன்றுக்கு உட்படுவதுடன், III ஆம் வினைத்திறமை தடைகாண் பரீட்சையில் சித்தியடையாத உத்தியோகத்தர் ஒருவராயின் பதவியில் நியமனம் பெற்று 5 வருட காலம் செல்வதற்கு முன்னர் வினைத்திறமை தடைகாண் பரீட்சையில் சித்தியடைய வேண்டும்.

(iii) பொது நிர்வாகச் சுற்றறிக்கை 01/ 2014 மற்றும் அதற்கு நேரொத்த சுற்றறிக்கைகளின்படி மொழி பற்றிய தேர்ச்சி மட்டத்தை 5 வருட காலத்துக்குள் பெற்றுக்கொள்ள வேண்டும். அரச கரும மொழியல்லாத மொழி மூலமொன்றில் சேவையில் சேர்ந்த உத்தியோகத்தர்களால் 3 வருட காலத்துள் அரச கரும மொழியொன்று பற்றிய தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்பதுடன், மற்றைய அரச கரும மொழி பற்றிய தேர்ச்சி 5 வருடத் துக்குள் பெற்றுக்கொள்ள வேண்டும்.

(iv) அமைச்சரவையின் தீர்மானங்களுக்கும் அரசாங்க சேவைகள் ஆணைக்குழு நடவடிக்கைமுறை விதி களுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவைக்கும், அரசாங்கத்தின் நிதி ஒழுங்குவிதிகளுக்கும் திணைக்கள ஏனைய கட்டளை களுக்கும் இந்நியமனம் உட்படும்.

3. **சம்பள அளவுத்திட்டம்.**– இப்பதவிக்கு 3/ 2016 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையின்படி எஸ்எல்-1-2006, ரூபா 47,615-10X1,335-8X1,630-17X2,170-ரூபா 1,10,895 (மாதாந்த) சம்பள அளவுத் திட்டமொன்று உரித்தாகிறது. தரங்கள் முறைக்கு சம்பந்தப்பட்ட ஆரம்ப சம்பள அளவுத்திட்டம் 76,175 ரூபா என்பதுடன் சம்பளப் படிநிலை 20 ஆகும். (2016.02.25 ஆந் திகதிய பொது நிருவாக சுற்றறிக்கை 03/ 2016 இன் ஏற்பாடுகளுக்கமைவாக அதன் அட்டவணை II இல் குறிப்பிட்டுள்ளவாறு சம்பளம் உரித்தாகிறது.)

4. **தகைமைகள் :**

(i) ***கல்வித் தகைமைகள்.***– பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டப்பின் படிப்பு பெற்றிருத்தல் வேண்டும்.

(ii) ***தொழில் தகைமைகள்.***– பொது நிர்வாக சுற்றறிக்கை 03/ 2016 இன்படி நீதி அமைச்சில் அல்லது பிற அமைச்சொன்றில்/ திணைக்களமொன்றில் நிறைவேற்றுச் சேவைகள் வகுதியின் பதவியொன்றில் சேவை செய்தல் மற்றும் உயர் நீதிமன்ற சட்டத்தரணி ஒருவராக இருத்தல்.

(iii) ***அனுபவம் :***

(i) பொது நிருவாகச் சுற்றறிக்கை 03/ 2016 இன்படி, நிறைவேற்றுச் சேவைகள் வகுதியின் முதலாம் தரத்தின் அலுவலர் ஒருவராதல் அல்லது நிறைவேற்றுச் சேவைகள் வகுதியின் இரண்டாம் தரத்தின் 7 வருட உயிர்ப்பானதும் திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்திசெய்திருத்தல் மற்றும் உரிய 7 சம்பள ஏற்றங்களைப் பெற்றிருத்தல்.

(ii) மிகக்கிட்டிய 5 வருட காலத்துள் திருப்திகரமான மட்டத்தின் அல்லது அதற்கு உயர் செயலாற்றுகையை வெளிப்படுத்தியிருத்தல்.

(iii) மிகக்கிட்டிய 5 வருட காலத்துள் ஒழுக்காற்றுத் தண்டனைக்கு உட்படாதிருத்தல்.

5. **வயதெல்லை**.- ஏற்புடையதாகாது.

6. **உடற் தகைமைகள்**.- ஒவ்வொரு விண்ணப்பதாரியும் இலங்கையின் எப்பிரதேசத்திலும் சேவை செய்வதற்கும் பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதுமான உடல் மற்றும் உள ரீதியில் தகுதியுடையவராக இருக்க வேண்டும்.

7. **பிற தகைமைகள்** :

(i) விண்ணப்பதாரர் இலங்கைப் பிரசை ஒருவராக இருத்தல் வேண்டும் ;

(ii) விண்ணப்பதாரர் சிறந்த நல்லொழுக்கம் உடையவராக இருத்தல் வேண்டும் ;

(iii) ஆங்கில மொழியில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும் ;

(iv) பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காகத் தேவையான சகல தகைமைகளையும் பூர்த்திசெய்ய வேண்டுமென விண்ணப்பங்கள் கோரப்படுகின்ற அறிவித்தலில்/ வர்த்தமானப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ள தினத்தில் அத்தகைமைகளை சகல விதத்திலும் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

8. **கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை**.- அமைச்சரவையின் தீர்மானத்தின் மீது நியமிக்கப்படுகின்ற நேர்முகப் பரீட்சைச் சபையினால் நடாத்தப்படுகின்ற கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையொன்றின் மூலம் புள்ளிகள் வழங்கப்படுவதுடன் அப்பரீட்சையின் போதே தகைமைகள் பரீட்சித்துப் பார்க்கப்படும்.

9. **நேர்முகப் பரீட்சையில் புள்ளிகள் வழங்கப்படும் முறை** :

| | புள்ளிகள் வழங்கப்பட வேண்டிய துறைகள் | மொத்தப் புள்ளிகள் | சித்தியடைந்த புள்ளிகள் |
|---|---|---|---|
| 1 | மேலதிக கல்வித் தகைமைகள் | 45 | ஏற்புடையதாகாது |
| 2 | உள்நாட்டு/ வெளி நாட்டுப் பயிற்சிகள் | 20 | |
| 3 | விண்ணப்பதாரரால் வெளியிடப் பட்டுள்ள சட்ட ஆராய்ச்சிகள் பற்றிய வெளியீடுகள் | 20 | |
| 4 | மேலதிக அனுபவம் | 10 | |
| 5 | நேர்முகப் பரீட்சை சபையின் தற்றுணிபின்படி தலைமைத்துவம், ஆளுமை மற்றும் தொலைத் தொடர்புத் திறன்கள் | 05 | |
| | மொத்தம் | 100 | |

10. (i) விண்ணப்பம் 22 x 29 செ. மீ. அளவிலான A4 தாளில் தயார்செய்ய வேண்டுமென்பதுடன் 1 தொடக்கம் 14 வரையிலான தலைப்புக்கள் முதலாம் பக்கத்திலும், 15 தொடக்கம் இறுதி வரையிலான தலைப்புக்கள் இரண்டாம் பக்கத்திலும் உள்ளடங்கும் வகையில் தயார் செய்யப்படுதல் வேண்டும். அதற்கான தகவல்களை தனது கையெழுத்தினாலேயே தெளிவாக உள்ளடக்க வேண்டும். சகல விதத்திலும் சரியாகப் பூர்த்திசெய்யப்படாதுள்ள அடிப்படைத் தகைமைகளைக் கொண்டிராத உரிய திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறுகின்ற மற்றும் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைவாக இல்லாத விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். சம்பந்தப்பட்ட விண்ணப்பத்தின் பிரதியொன்றைத் தம்வசம் வைத்திருப்பது பயனுள்ளதாகவிருக்கும். மேலும் பூர்த்தி செய்யப்படுகின்ற விண்ணப்பம் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு இசைந்ததாக உள்ளதா என விண்ணப்பதாரரால் பரீட்சித்துப் பார்க்க வேண்டுமெனவும் அவ்வாறு இல்லாவிடின் விண்ணப்பம் நிராகரிக்கப்படுமெனவும் அறிவித்துக்கொள்கிறேன். விண்ணப்பங்கள் இத்துடன் உள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக தயார்செய்ய வேண்டும். விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றமை அறிவிக்கப்படமாட்டாது.

**குறிப்பு** :

(அ) விண்ணப்பத்துடன் எந்தவொரு ஆவணமும் அல்லது அதன் பிரதிகள் ;

(ஆ) வேண்டப்படும்போது ஆவணங்களைச் சமர்ப்பிக்கத் தவறும் விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது.

(ii) அரசாங்க சேவையில்/ மாகாண அரசாங்க சேவையில், அரசாங்கக் கூட்டுத்தாபனங்களில் சேவையிலுள்ள உத்தியோகத்தர்கள் தமது திணைக்கள/ நிறுவனத் தலைவரினூடாக விண்ணப்பங்களை அனுப்ப வேண்டும்.

11. அமைச்சரவையினால் வழங்கப்படுகின்ற கட்டளைகள், அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடவடிக்கை முறை விதிகள் காலத்துக்குக்காலம் அரசாங்க சேவை தொடர்பில் வழங்கப்பட்டுள்ள சுற்றறிக்கைகள் மற்றும் கடன் இணக்க சபைத் திணைக்களத்தின் நிறைவேற்றுச் சேவைகள் வகுதிக்கான ஆட்சேர்ப்பு நடவடிக்கை முறையின் நிபந்தனைகள் இப்பதவிக்கு ஏற்புடையதாகிறது.

அமைச்சரவையின் கட்டளையின் பேரில்,

பத்மசிறி ஜயமான்ன,
செயலாளர்,
நீதி அமைச்சு.

நீதி அமைச்சு,
கொழும்பு 12,
2016, மாச்சு 4.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**நீதி அமைச்சு**

***சட்ட ஆணைக்குழுத் திணைக்களத்தின் நிறைவேற்றுச் சேவைகள் வகுதியின் செயலாளர் பதவி***

| |
|---|
| இல. ............................................ |
| (அலுவலக உபயோகத்துக்காக) |

1. (அ) முதலெழுத்துக்களுடன் பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) : ----.
முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்தில்) : ----.

(ஆ) முழுப்பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) :----.
முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்தில்) :----.

2. நிரந்தர முகவரி (சிங்களத்தில்/ தமிழில்) :----.

3. நிரந்தர முகவரி (ஆங்கில பெரிய எழுத்தில்) :----.

4. தொலைபேசி இல. :----.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

5. தேசிய ஆள் அடையாள அட்டை இல. :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

6. ஆணா/ பெண்ணா என்பது :----.

7. பிறந்த திகதி :

ஆண்டு : [ ][ ][ ][ ] மாதம் : [ ][ ] திகதி : [ ][ ]

8. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியன்று வயது :

வருடங்கள் : [ ][ ] மாதங்கள் : [ ][ ] நாட்கள் : [ ][ ]

9. தேசிய இனம் :----.

10. விவாகமானவரா/ விவாகமாகாதவரா என்பது :----.

11. பட்டப் பின்படிப்பு பற்றிய விபரம் :
பல்கலைக்கழகம் :----.
விடயத்துறை :----.
பட்டம் வழங்கப்பட்ட திகதி :----.
மொழி மூலம் :----.

12. சட்டத்தரணி ஒருவராக சத்தியப்பிரமாணம் செய்த திகதி :----.

13. சட்டத்தரணி ஒருவராக தொழில் அனுபவம் :
---- வருடங்கள்.

14. சேவையின் அனுபவம் பற்றிய விபரம் :
---- வருடங்கள்.

(i) தற்போது சேவை செய்யும் பதவி :----.
(ii) வகுப்பு அல்லது தரம் :----.
(iii) அத்தரத்திற்கு உயர்வு பெற்ற திகதி :----.
(iv) பதவியில் நியமனம் பெற்ற திகதி :----.
(v) அப்பதவியில் நிரந்தரமாக்கப்பட்ட திகதி :----.
(vi) சம்பள குறியீட்டு இலக்கம் மற்றும் சம்பள அளவுத் திட்டம் :----.
(vii) முன்னைய சேவைக்காலம் பற்றிய விபரம் :----.

| நிறுவனம் | வகித்த பதவி | சேவைக்காலம் (......... ஆந் திகதி தொடக்கம் ......... ஆந் திகதி வரை) |
|---|---|---|
| 1. ...................... | ........................ | ........................ |
| 2. ...................... | ........................ | ........................ |

15. விண்ணப்பங்கள் கோரப்படும் அறிவித்தலின் 4 ஆம் பந்தியின் படி தொழில் தகைமைகள் :

(i) நிறைவேற்று வகுதியின் முதலாம் தரத்தின் உத்தியோகத்தரா என்பது :----.

(ii) நிறைவேற்று வகுதியின் இரண்டாம் தரத்தின் உத்தியோகத்தராயின் இரண்டாம் தரத்தில் 7 வருட உயிர்ப்பானதும் திருப்திகரமானதுமான சேவைக்காலத்தைப் பூர்த்திசெய்துள்ளாரா என்பது மற்றும் உரிய சம்பள ஏற்றங்களைப் பெற்றுக்கொண்டுள்ளாரா என்பது :----.

(iii) மிகக்கிட்டிய 5 வருட காலத்தில் திருப்திகரமான மட்டத்தை அல்லது உயர் செயலாற்றுகையை வெளிப்படுத்தப்பட்டுள்ளதா ? :----.

(iv) மிகக் கிட்டிய 5 வருட காலத்தில் ஒழுக்காற்றுத் தண்டனைக் குட்படுத்தப்பட்டுள்ளாரா ? :----.

16. விண்ணப்பங்கள் கோரப்படும் அறிவித்தலின் 9 ஆம் பந்தியின்படி தகைமைகள் :

(i) ----------------------------------------------------.
(ii) ----------------------------------------------------.
(iii) ----------------------------------------------------.
(iv) ----------------------------------------------------.
(v) ----------------------------------------------------.
(vi) ----------------------------------------------------.
(vii) ----------------------------------------------------.
(viii) ----------------------------------------------------.

17. மொழித் தேர்ச்சி (ஏற்புடையதான கூட்டினுள் ✓ அடையாளத்தை இடுக.)

| | மிகவும் நன்று | நன்று | சாதாரணம் | குறைவு |
|---|---|---|---|---|
| சிங்களம் | | | | |
| தமிழ் | | | | |
| ஆங்கிலம் | | | | |

விண்ணப்பதாரியின் உறுதியுரை :

.................................................... ஆகிய நான் இதில் குறிப்பிட்டுள்ள சகல தகவல்களும் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் தெரிவித்துக்கொள்கிறேன். நான் அரசாங்க சேவையிலிருந்து விலக்கப்பட்டு அல்லது வினைத் திறமையின்மையின் மீது சேவையிலிருந்து ஓய்வுபெறச் செய்யப்படவில்லை எனவும், பதவிகளைக் கைவிட்டுச் சென்ற ஒருவராகக் கருதப்படவில்லை எனவும் உறுதிகூறுகின்றேன். இதில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் எதுவும் பொய்யானவை அல்லது பிழையானவை என நான் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்னர் தெரியவருமிடத்து தகுதியற்றவனாவேன் எனவும், தெரிவுசெய்யப்பட்டதன் பின்னர் தெரியவருமிடத்து நட்டஈடு எதுவுமின்றி தொழிலிலிருந்து நீக்கப்படுவேன் எனவும் நான் அறிவேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

திணைக்களத் தலைவரின் சான்றிதழ் (விண்ணப்பதாரரின் சொந்தக் கோவையின்படி)

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி ......... ........................................................................ மத்திய அரசாங்கத்தின் கீழான ................................................ மாகாண சபையின் கீழான ........................................ அமைச்சில்/ திணைக்களத்தில் ........ ............................................................ பதவியொன்றில் சேவை

செய்கின்றார் எனவும், மிகக்கிட்டிய 7 வருட காலத்தினுள் அவரது சம்பள ஏற்றங்கள் யாவும் பெற்றுள்ளார் எனவும், அக்காலப் பகுதியினுள் தவறொன்றுக்கு எச்சரிக்கை செய்தல் தவிர எவ்வகையான ஒழுக்காற்றுத் தண்டனைக்கும் அவர் உட்படவில்லை என்றும், வர்த்தமானி அறிவித்தலின் 4 ஆம் பந்திக்கமைவாக மிகக்கிட்டிய 5 வருட உயிர்ப்பானதும் திருப்திகரமானதுமான சேவைக்காலத்தைக் கொண்டுள்ளார் என்றும், வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிட்டுள்ள ஒழுங்குவிதிகளின் பிரகாரம் அவர் இப்பதவிக்கு விண்ணப்பிப்பதற்கான தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ளார் என்றும், இப்பதவிக்காகத் தெரிவுசெய்யப்படுவாராயின் அவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது என்றும் அறிவித்துக் கொள்கிறேன்.

----,
அமைச்சின் செயலாளரின்/ திணைக்களத்
தலைவரின் கையொப்பமும் அலுவலக முத்திரையும்.

பெயர் :----.
பதவி :----.
அமைச்சு/ திணைக்களம் :----.
திகதி :----.

4-237

## பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

### அரசாங்க சேவை ஆணைக்குழு

### இலங்கை கட்டடக் கலைஞர் சேவையின் III ஆம் தரத்திற்குச் சேர்த்துக்கொள்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2015

இலங்கை கட்டடக் கலைஞர் சேவையின் III ஆம் தரத்திற்கான பதவிகளில் நிலவும் வெற்றிடங்களுக்கான தகைமையுடையவர்களைத் தெரிவுசெய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்காக அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைப்படி விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவ்வறிவித்தலின் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்திற்கேற்ப தயாரிக்கப்படும் விண்ணப்பத்தினைக் கீழ்க்குறிப்பிடப்படும் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் "பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், த. பெ. இல. 1503, கொழும்பு" என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பங்களை உள்ளடக்கிய கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "இலங்கை கட்டடக் கலைஞர் சேவையின் III ஆம் தரத்திற்காக ஆட்சேர்ப்பிற்கான திறந்த போட்டிப் பரீட்சை" என்று தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். மேலும் பரீட்சையின் பெயரினை சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்களத்துக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும், தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடுதல் வேண்டும்.

(அ) விண்ணப்ப முடிவுத் திகதி 2016.05.02 ஆந் திகதியாகும்.

**குறிப்பு**.- விண்ணப்பப்படிவம் அல்லது அது தொடர்பிலான ஆவணம் போன்றன தபாலில் காணாமல் போதல் அல்லது தாமதமடைதல் பற்றிய முறைப்பாடுகள் கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது. விண்ணப்பத்தினை விண்ணப்ப முடிவுத் திகதிவரை தாமதமடையச் செய்வதால் ஏற்படுகின்ற பாதிப்புக்களை விண்ணப்பதாரிகளே பொறுப்பேற்க வேண்டும்.

1. **சேவையில் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும் முறை**.- எழுத்துப் பரீட்சையில் சகல பாடங்களிலும் 40 புள்ளிகளை விட அதிகமாகப் பெற்று சித்தியெய்திய விண்ணப்பதாரிகளில் பரீட்சையில் பெற்றுக்கொண்ட மொத்தப் புள்ளிகளின் திறமைகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்வதற்கு நாடப்படும் எண்ணிக்கைக்குச் சமனான எண்ணிக்கையினர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு தகைமையுள்ள விண்ணப்பதாரிகள் இணைத்துக்கொள்ளப்படுவார்கள்.

நியமிக்கப்படும் எண்ணிக்கை மற்றும் நியமனம் அமுல்படுத்தப்படும் திகதி அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைப் பிரகாரம் தீர்மானிக்கப்படும்.

2. **சேவையில் ஈடுபடுத்துவதற்கான நிபந்தனைகள்** :

(i) இப்பதவி நிரந்தரமானது. விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டம்/ தபுதாரர், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்குப் பங்களிப்புச் செய்தல் வேண்டும் ;

(ii) இப்பதவிக்கு நியமிக்கப்படும் அலுவலர்கள் மூன்று (3) வருடங்களுக்கு தகுதிகாண் காலப்பகுதிக்கு உட்பட்டுள்ளதுடன் ஆட்சேர்ப்புச் செய்த திகதியிலிருந்து மூன்று (3) வருடத்திற்குள் முதலாவது வினைத்திறன் தடைதாண்டற் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும் ;

(iii) அரச கரும மொழி அல்லாத மொழியொன்றின் மூலம் சேவையில் இணைந்த உத்தியோகத்தர் ஒருவர் தகுதிகாண் காலப்பகுதிக்குள் ஓர் அரச கரும மொழியில் தேர்ச்சியைப் பெற்றிருப்பதோடு, பொது நிர்வாக சுற்றறிக்கை 01/2014 இற்கிணங்க மற்றைய அரச மொழி தொடர்பான தேர்ச்சி மட்டத்தினை 5 வருடங்களுக்குள் பெற்றுக்கொள்ள வேண்டும்.

(iv) அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் செயற்பாட்டு ஒழுங்கு விதிமுறைகளுக்கும், கட்டடக் கலைஞர் சேவை தொடர்பான சேவைப்பிரமாணக் குறிப்பு மற்றும் காலத்திற்குக் காலம் மேற்கொள்ளப்பட்டுள்ள மறுசீரமைப்பின் நிபந்தனைகளுக்கும் இப்பதவி உரித்துடையதாகும்.

3. **சம்பள அளவுத்திட்டம்**.- இப்பதவிக்குரிய பொது நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 06/2006 இன் சம்பள சுற்றறிக்கைக்கு அமைய எஸ்எல்-1-2006 ரூபா 22,935 - 10 x 645 - 8 x 790 - 17 x 1,050 - ரூபா 53,555 (மாதாந்த) சம்பள அளவு உரித்தாகும்.

4. **கல்வித் தகைமைகள்**.- பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து ஐந்து வருட கட்டடக் கலையியல் பட்டத்தினைப் பெற்றிருத்தல் ;

அல்லது

பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து மூன்று வருட சூழல் உருவாக்கம் (Build environment) தொடர்பான பட்டத்துடன் குறித்த பட்டப்பின் படிப்பு டிப்ளோமாவினைப் பெற்றிருத்தல்.

அல்லது

பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து மூன்று வருட சூழல் உருவாக்கம்

தொடர்பான பட்டத்துடன் குறித்த துறையில் 5 வருடங்கள் அனுபவம் பெற்றிருத்தல்.

5. **வயதெல்லை**.- விண்ணப்பத்தினைப் பொறுப்பேற்கும் இறுதித் திகதியன்று 21 வயதைவிடக் குறையாமலும் 35 வயதைவிட மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

6. **உடற்தகைமை** :

(i) சகல பரீட்சார்த்திகளும் நாட்டின் எப்பிரதேசத்திலும் சேவையாற்றக்கூடியவராக இருத்தல் வேண்டும்.

(ii) பதவியின் கடமையை நிறைவேற்றுவதற்குப் போதியளவு உடல் உளத் தகைமை கொண்டவராக இருத்தல் வேண்டும்.

7. **ஏனைய தகைமைகள்** :

(i) விண்ணப்பதாரர்கள் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ii) விண்ணப்பதாரர்கள் சிறந்த நன்னடத்தைக் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

(iii) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கு அவசியமான சகல தகைமைகளையும் எல்லா வகையிலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(iv) ஒரு பரீட்சார்த்தி இலங்கை கட்டடக் கலைஞர் சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்காக இரு தடவைகளுக்கு மேல் தோற்றாமலிருத்தல்.

(v) யாதேனும் மதப்பிரிவினைச் சார்ந்த துறவி ஒருவராக இல்லாதிருத்தல்.

(vi) தற்போது அரச சேவையில் கடமையாற்றுபவர்களுக்கு உச்ச வயதெல்லை உரித்தாகாது.

8.

8.1 ***எழுத்துப் பரீட்சை*** :

8.1.1 இந்தப் பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும்.

8.1.2 பாடத்திட்டம் :

| இலக்கம் | பாடங்கள் | அதிகூடிய புள்ளியின் அளவு | சித்திக்குரிய புள்ளியின் அளவு | காலம் (மணித்தியாலம்) |
|---|---|---|---|---|
| 1 | நுண் அறிவுப் பரீட்சை | 100 | 40 | 01 |
| 2 | பொது அறிவு | 100 | 40 | 02 |

***பாட இலக்கம் 01 - நுண்ணறிவுப் பரீட்சை***.- பரீட்சார்த்தியின் தர்க்க ரீதியான விளக்கம், சிக்கல்கள் தொடர்பிலான பகுப்பாய்வுத் திறமை, தீர்மானம் எடுத்தல் தொடர்பாக பரீட்சார்த்திக்கு உள்ள புத்திக்கூர்மை மட்டத்தை அளவிடுவது இதன் மூலமாக எதிர்பார்க்கப்படுகின்றது. இவ்வினாத்தாள் பல்தேர்வு வினாக்கள் மற்றும் சுருக்க விடைகளுக்கான வினாக்கள் 50 இனைக் கொண்டிருப்பதோடு சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

***பாட இலக்கம் 02 - பொது அறிவு***.- இலங்கை மற்றும் உலகின் சமூக, பொருளாதார, அரசியல், கலாசார, விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப நிலைமைகள் பற்றிய பரீட்சார்த்தியின் விடய அறிவு அல்லது பரீட்சார்த்திக்கு முன்வைக்கப்படுகின்ற சூழ்நிலை ஒன்றுடன் தொடர்புடையதாக ஆக்க பூர்வமாக, பகுப்பாய்வு ரீதியாக மற்றும் விமர்சன ரீதியான சிந்திக்கும் ஆற்றல், முன்னுரிமை பற்றி தீர்மானிக்கும் ஆற்றல் மற்றும் உபாய மார்க்க ரீதியாக எதிர்காலத்தை எதிர்வுகூறக்கூடிய ஆற்றல் சம்பந்தமாக பரீட்சார்த்தி கொண்டுள்ள திறமைகளை அளவிடுவது இதன் மூலமாக எதிர்பார்க்கப்படுகின்றது. இவ்வினாப்பத்திரம் இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ளது. முதற்பகுதி சுருக்க விடைகளைக் கொண்டது. அதற்காக 25 புள்ளிகள் வழங்கப்படும். இரண்டாம் பகுதி பாதி கட்டமைக்கப்பட்ட வினாக்களினைக் கொண்டது. இவ்வினாக்கள் 8 இல் 5 வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும் என்பதோடு அதற்காக 75 புள்ளிகளும் வழங்கப்படும்.

8.1.3 ***பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிடல்***.- எழுத்துப் பரீட்சைக்குத் தோற்றி தகைமையினைப் பெற்ற பரீட்சார்த்திகள் தேர்ச்சிகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட, அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் அறிவித்தலின்படி கட்டளையிடப்பட்ட புள்ளியின் எல்லையினைத் தாண்டி மொத்தப் புள்ளிகளைப் பெற்ற பரீட்சார்த்திகளின் பெயர்களை உள்ளடக்கிய பெறுபேற்று அட்டவணை செயலாளர், அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிற்கு கொடுக்கப்படும். பரீட்சைக்குத் தோற்றிய சகல பரீட்சார்த்திகளினதும் பெறுபேறுகள் தனிப்பட்ட வகையில் அறிவிக்க பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் தபாலில் அல்லது www.results.exams.gov.lk என்ற இணையத்தள முகவரியின் மூலம் வெளியிடப்படும்.

8.2 ***நேர்முகப் பரீட்சை*** :

8.2.1 ***சாதாரண நேர்முகப் பரீட்சை***.- எழுத்துப் பரீட்சையில் சகல பாடங்களிலும் சித்தியெய்திய விண்ணப்பதாரிகளில் பரீட்சையில் பெற்றுக் கொண்ட புள்ளிகளின் மொத்தத்தில் திறமைகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்வதற்கு நாடப்படும் எண்ணிக்கைக்குச் சமனான எண்ணிக்கையினர் நேர்முகப் பரீட்சைக்கு அழைத்து தகைமையுள்ள விண்ணப்பதாரிகள் இணைத்துக்கொள்ளப்படுவார்கள்.

நேர்முகப் பரீட்சையின்போது, அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதா என்றும் தேகாரோக்கியமும் பரீட்சித்துப் பார்க்கப்படும் (புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது).

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சைச் சபையினால் தகைமைகள் பரீட்சித்துப் பார்க்கப்படும்.

*9.* ***பரீட்சை நிபந்தனைகள் :***

(i) பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடைபெறும். பரீட்சார்த்திகள் விருப்பமான ஒரு மொழியில் பரீட்சைக்குத் தோற்றலாம். சகல வினாப்பத்திரங்களுக்கும் ஒரு மொழியிலேயே விடையளிக்க வேண்டும். பரீட்சார்த்தி ஒருவருக்கு தனது விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடுகின்ற பரீட்சை மொழி மூலத்தினை மாற்றம் செய்வதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது. சகல பரீட்சார்த்திகளும் வினாப்பத்திரங்கள் அனைத்திற்கும் தோற்ற வேண்டும்.

(ii) பரீட்சைக் கட்டணம் 1,000 ரூபா ஆகும். பரீட்சைக் கட்டணம் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-02-13 இற்கு வரவு வைக்கும் வகையில் நாட்டின் எந்தவொரு தபாலகம்/ உப தபாலகங்களில் செலுத்தி விண்ணப்பதாரியின் பெயரிலேயே பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தின் உரிய இடத்தில் கழராது ஒட்டிவிடவும். இப்பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியை தம்வசம் வைத்திருப்பது பயனளிக்கும். பரீட்சைக் கட்டணம் தொடர்பாக பணம் அல்லது முத்திரை ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

(iii) பரீட்சைக்காகச் செலுத்தப்பட்ட பணம் எக்காரணம் கொண்டும் மீளளிக்கப்படமாட்டாது.

(iv) பரீட்சை இடம்பெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

(v) பூரணமற்ற விண்ணப்பப்படிவங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

**குறிப்பு**.- அனுமதிப்பத்திரமின்றி பரீட்சை மண்டபத்தினுள் பிரவேசிக்க அனுமதியளிக்கப்பட மாட்டாது. பரீட்சை ஆரம்பமாகும் தினத்தில் பரீட்சை மண்டப் பொறுப் பாளரிடம் தனது கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதிப்பத்திரத்தை மாத்திரம் ஒப்படைத்தல் வேண்டும்.

அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள இறுதித் தினத்தில் அல்லது அதற்கு முன்னர் பரீட்சைக் கட்டணத்தினைச் செலுத்தி அதற்கான பற்றுச்சீட்டுடன் சரியான முறையில் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தினை அனுப்பிய விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை அனுமதிப்பத்திரம் வழங்கப்படும். பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சை அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவதால் அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகுதி பெற்றுள்ளார் எனக் கருத முடியாது.

(vi) விண்ணப்பப்படிவம் 22 x 29 சென்றி மீற்றர் அளவில் ஏ4 கடதாசிகளில் தயாரிக்கப்பட வேண்டியதுடன், 1.0 முதல் 2.9 வரையான தலைப்புக்கள் முதற்பக்கத்திலும், 2.10 முதல் 5.0 வரையான தலைப்புக்கள் இரண்டாம் பக்கத்துக்கும் எஞ்சியவை மூன்றாவது நான்காவது பக்கத்திற்கும் வருமாறு தயாரிக்கப்பட வேண்டியதோடு அதற்குரிய தகவல்கள் தமது கையெழுத்தினால் தெளிவாக எழுதப்படல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு மாற்றமான விண்ணப்பப்படிவங்கள், முழுமையாகப் பூர்த்திசெய்யப்படாத விண்ணப்பப்படிவங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பத்தின் நிழற்படப் பிரதியொன்றினை வைத்திருத்தல் பிரயோசன மிக்கதாகும்.

(vii) விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றது என அறிவிக்கப்பட மாட்டாது என்பதுடன், பரீட்சை அனுமதிப்பத்திரம் அனுப்பியவுடன் அது பற்றி பத்திரிகை அறிவித்த லொன்று இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் வெளியிடப்படும். அறிவித்தல் வெளியிடப்பட்டு 2 அல்லது 3 நாட்கள் கடந்ததன் பின்னரும் அனுமதிப்பத்திரம் கிடைக்கப்பெறாதுவிடின் அறிவித்தலில் குறிப்பிட்டவாறு அது தொடர்பாக இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அறியப்படுத்துதல் வேண்டும். நீர் வைத்திருக்கும் விண்ணப்பத்தின் நிழற்படப் பிரதியையும், விண்ணப்பப்படிவம் பதிவுத்தபாலில் அனுப்பிய பற்றுச்சீட்டினையும், விண்ணப்பதாரி கொழும்புக்கு வெளியில் உள்ளவராயின் மேற்படி தகவல்களுடன் தொலைநகல் மூலம் பரீட்சை அனுமதிப்பத்திரப் பிரதியொன்றைத் துரிதமாகப் பெற்றுக்கொள்வதற்காக விண்ணப்பதாரியின் தொலைநகல் இலக்கத்தையும் குறிப்பிட்டு, வேண்டுதல் கடிதமொன்றை அறிவித்தலில் குறிப்பிட்டுள்ள தொலைநகல் இலக்கத்திற்கு அனுப்பி வைத்தல் விசாரணைக்கு மிகவும் பயனுள்ளதாகும்.

(viii) இப்பரீட்சை 2016 ஆம் ஆண்டு யூலை மாதம் கொழும்பில் நடாத்தப்படுவதோடு, அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அனுமதியின் பேரில் பரீட்சையை ஒத்திவைத்தல் அல்லது இரத்துச் செய்யும் உரிமை பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்குரியதாகும்.

(ix) பரீட்சை நடாத்துவது தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விடுக்கப்படுகின்ற சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கீழ்ப்படிதல் வேண்டும். அச்சட்ட திட்டங்களை மீறினால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்படும் தண்டனைக்கு உட்பட நேரிடும்.

(x) ***பரீட்சார்த்தியின் அடையாளம்***.- பரீட்சை மண்டபப் பொறுப்பாளர் திருப்தியுறுகின்ற விதத்தில் சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தில் தமது ஆள் அடையாளத்தினை உறுதிப்படுத்தல் வேண்டும். பின்வரும் ஆவணங்களில் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும் :

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை ;
(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

**குறிப்பு** :

(அ) விண்ணப்பத்துடன் எந்த ஆவணங்களோ அவற்றின் பிரதிகளையோ இணைத்தல் கூடாது.
(ஆ) நேர்முகப் பரீட்சையின்போது கேட்கப்படும் ஆவணங்களைச் சமர்ப்பிக்க முடியாத பரீட்சார்த்திகளின் விண்ணப்பப்படிவங்கள் கருத்திற்கொள்ளப்பட மாட்டாது.

(xi) அரச சேவையில்/ மாகாண சேவையில்/ அரச கூட்டுத் தாபனங்களில் சேவையாற்றும் உத்தியோகத்தர்களினால் தமது திணைக்களம்/ நிறுவனப் பொறுப்பாளர் ஊடாக விண்ணப்பப்படிவங்களை அனுப்புதல் வேண்டும். பரீட்சைக்குத் தோற்ற முன்னர் சகல விண்ணப்பதாரிகளும் அவர்களது கையொப்பத்தை தாம் சேவையாற்றும் நிறுவனத்தின் தலைவர் மூலம் உறுதிப்படுத்தல் வேண்டும். அவ்வாறல்லாத ஏனைய விண்ணப்பதாரிகள் தமது கையொப்பத்தினை அரச பாடசாலைப் பொறுப்பாளர்கள்/ ஓய்வுபெற்ற பொறுப்பாளர், கோட்டத்தின் கிராம

அலுவலர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, முப்படையின் அதிகாரிகள், ரூபா 2,40,360 அல்லது அதற்கு மேற்பட்ட வருடாந்த சம்பளத்தினைப் பெறும் அரச அல்லது மாகாண சேவையில் உள்ள நிரந்தர பதவிநிலை உத்தியோகத்தர் அல்லது பௌத்த விகாரையின் விகாராதிபதி அல்லது தேரர் அல்லது வேறு சமயத் தலைவர்கள் ஊடாக உறுதிப்படுத்த வேண்டும்.

10. **போலித் தகவல்களை வழங்குவதற்கான தண்டனை.-** பரீட்சார்த்தி தகைமையற்றவர் எனத் தெரியவரும் பட்சத்தில் பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடாத்தப்படும் காலத்தில் அல்லது பரீட்சைக்குப் பின்னர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரின் பரீட்சார்த்தி அந்தஸ்தினை இரத்துச்செய்ய இடமுண்டு. பரீட்சார்த்தியினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஏதேனும் ஒரு விடயம் உண்மைக்குப் புறம்பானது எனத் தெரியவரும் பட்சத்தில் அவ்வாறின்றேல் ஏதேனும் விடயத்தை தெரிந்தே மறைத்திருப்பின் அவரை அரச சேவையிலிருந்து இடைநிறுத்தவும் இடமுண்டு.

11. இந்த வர்த்தமானி அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிக் கருத்துக்களில் ஏதேனும் முரண்பாடுகள் தோன்றின், அவ்வேளை சிங்கள மொழிக் கருத்தே மேலோங்கி நிற்க வேண்டும்.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

ஜே. தடல்லகே,
செயலாளர்,
பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு.

பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு,
2016, மாச்சு.

மாதிரி விண்ணப்பப்படிவம்

[ ]
(அலுவலக உபயோகத்திற்கு)

**இலங்கை கட்டடக் கலைஞர் சேவையின் III ஆம் தரத்திற்கு சேர்த்துக்கொள்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை (2015)**

Open Examination for Recruitment to Grade III of Sri Lanka Architectural Service - (2015)

1. பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் : [ ]
சிங்களம்-2, தமிழ்-3, ஆங்கிலம்-4)
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக.)

* விண்ணப்பப்படிவத்தினை நிரப்பவேண்டியது பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலத்திலாகும்.

2. தனிப்பட்ட தகவல்கள் :

2.1 முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
(உதாரணம் : HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)

2.2 முதலெழுத்துக்களுடன் பெயர், முதலெழுத்துக்களை இறுதியில் எழுதுக (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) : ----.
(உதாரணம் : GUNAWARDHANA, H. M. S. K.)

2.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) :----.

2.4 தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

2.5 நிரந்தர முகவரியினை (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) : ----.
(இம்முகவரிக்கு பரீட்சை அனுமதிப்பத்திரம் அனுப்பப் படும்.)

2.6 நிரந்தர முகவரி (சிங்களத்தில்/ தமிழில்) :----.

2.7 பால் (ஆண்/ பெண்) : [ ]
ஆண்-0, பெண்-1
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக.)

2.8 பிறந்த திகதி :

ஆண்டு : [ | | | ] மாதம் : [ | ] திகதி : [ | ]

2.9 விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதிக்கு வயது :

வருடங்கள் : [ | ] மாதங்கள் : [ | ] நாட்கள் : [ | ]

2.10 தபாலக நகரம் :----.

2.11 தேசிய இனம் : [ ]
சிங்களவர்-1, தமிழர்-2, இந்திய தமிழர்-3, முஸ்லிம்-4, ஏனையோர்-5
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக.)

2.12 விவாகமானவர்/ விவாகமாகாதவர் : [ ]
(விவாகமானவர்-1, விவாகமாகாதவர்-2)
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக.)

2.13 தொலைபேசி இலக்கம் :

கையடக்கத் தொலைபேசி

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

நிலையான

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

2.14 மின்-அஞ்சல் முகவரி :----.

3. தகைமைகள் :

3.1 பட்டம் :----.
3.2 பட்டம் செல்லுபடியாகும் திகதி :----.
3.3 பரீட்சை இலக்கம் :----.
3.4 பரீட்சைக்குத் தோற்றிய மொழி மூலம் :----.

4. பற்றுச்சீட்டினை சரியாக இங்கு ஒட்டவும் :

[ ]

பற்றுச்சீட்டு இலக்கம் :----.
செலுத்திய அலுவலகம் :----.
திகதி :----.

5. யாதேனும் குற்றவியல் நடவடிக்கைக்காக எப்போதாவது அல்லது நீதிமன்றத்தில் குற்றவாளியாக நின்றிருப்பின், அக்குற்றம் மற்றும் பெற்ற தண்டனை தொடர்பாக விளக்கவும் :----.

6. விண்ணப்பதாரியின் சான்றிதழ் :

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவு மற்றும் நம்பிக்கைக்கு எட்டிய வகையில் உண்மையானவையெனவும், பரீட்சைக் கட்டணம் செலுத்திய .................... இலக்கம் மற்றும் .................... ஆந் திகதியைக் கொண்ட பற்றுச்சீட்டினை இதில் ஒட்டியதாகவும் பிரகடனம் செய்கின்றேன். நான் இப்பரீட்சையின் நிபந்தனைகளுக்கு இணங்க நான் தகைமையற்றவர் எனத் தெரிந்தால், பரீட்சைக்கு முன் அல்லது தோற்றும்போது அல்லது அதன் பின்னர் தோற்றுவதற்கு அனுமதியளிக்கப்பட மாட்டேன் என்ற தீர்மானத்திற்கு நான் உடன்படுகிறேன். மேலும் இப்பதவிக்குத் தெரிவுசெய்யப்பட்டதன் பின்னர் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் பிழை அல்லது உண்மைக்குப் புறம்பானதாக இருப்பின் இழப்பீட்டுத் தொகையினைச் செலுத்தாமல் தன்னை சேவையிலிருந்து பதவியிறக்கம் செய்வதற்கும், அவ்வாறே பரீட்சை நடாத்துதல் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விடுக்கப்படுகின்ற சட்டதிட்டங்கள் மற்றும் பெறுபேற்றினை வெளியிடுதல் தொடர்பாக எடுக்கப்படும் தீர்மானங்களுக்கு கட்டுப்படுவதாகவும் உறுதியளிக்கின்றேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

7. விண்ணப்பதாரியின் கையொப்பத்தினை உறுதிப்படுத்துதல் (வர்த்தமானி அறிவித்தலின் 9 (XI) ஏற்ப இருத்தல் வேண்டும்.)

இவ்விண்ணப்பத்தினைச் சமர்ப்பிக்கும் ............ ...................... (முழுப்பெயர்) என்பவரைத் தனிப்பட்ட முறையில் நான் அறிவேன் எனவும், உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தியுள்ளதாகவும், அதன் பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளதாகவும் ........................... ஆந் திகதி அவர் எனது முன்னிலையில் தனது கையொப்பத்தினை இட்டதாகவும் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
கையொப்பத்தினை உறுதிப்படுத்தும்
அதிகாரியின் கையொப்பம்.

கையொப்பத்தினை உறுதிப்படுத்தும்
அதிகாரியின் முழுப்பெயர் :----.
பதவிப் பெயர் :----.
முகவரி :----.
திகதி :----.
(உத்தியோகபூர்வ முத்திரை) :

8. திணைக்களத் தலைவரின் உறுதியுரை (அரச/ மாகாண அரச/ அரசல்லாத கூட்டுத்தாபனங்களில் சேவையாற்றும் விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரம்) :

இவ்விண்ணப்பப்படிவத்தினை முன்வைக்கும் ............... ......................... திரு./ திருமதி/ செல்வி இவ்வமைச்சில்/ திணைக்களத்தில்/ நிறுவனத்தில் ................................ ஆக சேவை செய்வதுடன் அவரின் விண்ணப்பத்தினை பரிந்துரை செய்து சமர்ப்பிக்கிறேன். இப்பதவிக்காகத் தேர்ந்தெடுக்கும் பட்சத்தில் இந்நிறுவன சேவையிலிருந்து விடுவிக்கத் தேவையான நடவடிக்கை மேற்கொள்ள முடியும்.

----,
திணைக்களத் தலைவர்/ அதிகாரமளிக்கப்பட்ட
உத்தியோகத்தர்.

திணைக்களத் தலைவரின்/ அதிகாரமளிக்கப்பட்ட
உத்தியோகத்தரின் பெயர் :----.
பதவியின் பெயர் :----.
திகதி :----.
(பதவி முத்திரை மூலம் உறுதிப்படுத்தவும்) :

4-288

---

## அரசாங்க சேவை ஆணைக்குழு

### இலங்கை கட்டடக் கலைஞர் சேவையின் III ஆம் தரத்திற்குச் சேர்த்துக்கொள்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2015

இலங்கை கட்டடக் கலைஞர் சேவையின் III ஆம் தரத்திற்கான பதவிகளில் காணப்படும் வெற்றிடங்கள் 9 இற்கான தகைமையுடைய அரச சேவையில்/ மாகாண அரச சேவையில், சேவையிலுள்ள உத்தியோகத்தர்களிடமிருந்து அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைப்படி விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவ்வறிவித்தலின் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்திற்கேற்ப தயாரிக்கப்படும் விண்ணப்பத்தினைக் கீழ்க்குறிப்பிடப்படும் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை, இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம், த. பெ. இல. 1503, கொழும்பு என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பங்களை உள்ளடக்கிய கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''இலங்கை கட்டடக் கலைஞர் சேவையின் III ஆம் தரத்திற்காக ஆட்சேர்ப்பிற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை'' என்று தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். மேலும் பரீட்சையின் பெயரினை சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும், தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடுதல் வேண்டும்.

(அ) விண்ணப்ப முடிவுத் திகதி 2016.05.02 ஆந் திகதியாகும்.

**குறிப்பு**.- விண்ணப்பப்படிவம் அல்லது அது தொடர்பிலான ஆவணம் போன்றன தபாலில் காணாமல் போதல் அல்லது தாமதமடைதல் பற்றிய முறைப்பாடுகள் கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது. விண்ணப்ப முடிவுத் திகதிவரை விண்ணப்பங்களை தாமதமடையச் செய்வதால் ஏற்படுகின்ற பாதிப்புக்களை விண்ணப்பதாரிகளே பொறுப்பேற்க வேண்டும்.

*1.* ***ஆட்சேர்ப்பு முறை***.- எழுத்துப் பரீட்சை மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் பெறுபேற்றின் அடிப்படையில் இணைத்துக்கொள்ளப்படும்.

எழுத்துப் பரீட்சையில் சகல பாடங்களிலும் 40% அல்லது அதனைவிட அதிகமாகப் பெற்று சித்தியெய்திய விண்ணப்பதாரிகளில் பரீட்சார்த்திகள் பெற்றுக்கொண்ட புள்ளிகளின் திறமைகளை அடிப்படையாகக் கொண்டு ஆட்சேர்ப்புச் செய்வதற்குக் கருதுகின்ற

எண்ணிக்கையின் இரு மடங்கினர் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள். கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையில் பரீட்சார்த்திகளுக்கு வழங்கப்படும் புள்ளிகளுடன், எழுத்துப் பரீட்சையில் பெற்றுக்கொண்ட புள்ளிகளையும் சேர்த்து மொத்தப் புள்ளிகளின் திறமை முன்னுரிமை அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்படும்.

நியமிக்கப்படும் எண்ணிக்கை மற்றும் நியமனம் அமுல்படுத்தப்படும் திகதி அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப் பிரகாரம் தீர்மானிக்கப்படும்.

மட்டுப்படுத்தப்பட்ட வரையறையின் கீழ் தகைமை பெறும் விண்ணப்பதாரிகள் போதுமான எண்ணிக்கையில் காணப்படாதவிடத்து அவ்வெண்ணிக்கையினர் திறந்த வரையறையின் மூலம் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

2. **சேவையில் ஈடுபடுத்துவதற்கான நிபந்தனைகள்** :

(i) இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும். விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டம்/ தபுதாரர், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்குப் பங்களிப்புச் செய்தல் வேண்டும் ;

(ii) இப்பதவிக்கு நியமிக்கப்படும் உத்தியோகத்தர்கள் ஒரு வருடம் தகுதிகாண் காலப்பகுதிக்கு உட்பட்டுள்ளார்கள் ;

(iii) பொது நிர்வாக சுற்றறிக்கை 01/2014 இற்கிணங்க மற்றைய அரச கரும மொழி தொடர்பான தேர்ச்சி மட்டத்தினை 5 வருடங்களுக்குள் பெற்றுக்கொள்ள வேண்டும் ;

(iv) அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயற்பாட்டு ஒழுங்கு விதிமுறைகளுக்கும், இலங்கை கட்டடக் கலைஞர் சேவை தொடர்பான சேவைப்பிரமாணக் குறிப்பு மற்றும் காலத்திற்குக் காலம் மேற்கொள்ளப்பட்டுள்ள மறுசீரமைப்பின் நிபந்தனைகள் இப்பதவிக்கு உரியதாகும்.

3. **சம்பள அளவுத்திட்டம்**.- இப்பதவிக்குரிய பொது நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 06/ 2006 இன் சம்பள சுற்றறிக்கைக்கு அமைய எஸ்எல்-1-2006 ரூபா 22,935 - 10 x 645 - 8 x 790 - 17 x 1,050 - ரூபா 53,555 (மாதாந்த) சம்பள அளவு உரித்தாகும்.

4. **கல்வித் தகைமைகள்** :

(i) பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து சுற்றுச்சூழல் அறிவியல் தொடர்பான பட்டத்தினைப் பெற்று அரச சேவையில் 5 வருடங்களுக்கு நிரந்தர மற்றும் திருப்திகரமான சேவைக்காலத்துடன் கூடிய அபிவிருத்தி உதவியாளர்கள் ;

(ii) இலங்கைக் கட்டடக் கலைஞர்களின் நிறுவனத்தில் அங்கீகாரம்பெற்ற பாடநெறி I ஆம் பாகத்தில் சித்தியெய்திய அரச சேவையில் 10 வருடங்களுடன் கிட்டிய 5 வருடங் களில் திருப்திகரமான சேவைக் காலத்தினைப் பெற்ற உத்தியோகத்தர்கள் ;

மற்றும்

பதவியுயர்வு பெறும் தினத்திற்கு முன்னரான 5 வருடங்கள் திருப்திகரமான சேவைக் காலத்துடன் இலங்கை தொழில்நுட்பச் சேவையின் விசேட வகுப்பில் உள்ள வரைபடக் கலைஞர்.

5. **உடற்தகைமை** :

(i) சகல பரீட்சார்த்திகளும் நாட்டின் எப்பிரதேசத்திலும் சேவையாற்றக்கூடியவராக இருத்தல் வேண்டும்.

(ii) பதவியின் கடமையை நிறைவேற்றுவதற்குப் போதியளவு உடல் உளத் தகைமையைக் கொண்டவராகவும் இருத்தல் வேண்டும்.

6. **வயதெல்லை**.- ஏற்புடையதாகாது.

7. **ஏனைய தகைமைகள்** :

(i) விண்ணப்பதாரர்கள் சிறந்த நன்னடத்தை கொண்டவராக இருத்தல் வேண்டும்.

(ii) பதவியுயர்வு பெறும் தினத்திற்கு முன்னரான 5 வருடங் களினுள் முனைப்புடனான மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தினைப் பூர்த்திசெய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

8.

8.1 ***எழுத்துப் பரீட்சை*** :

8.1.1 இந்தப் பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத் தினால் நடாத்தப்படும்.

8.1.2 பாடத்திட்டம் :

| இலக்கம் | பாடங்கள் | அதிகூடிய புள்ளியின் அளவு | சித்திக்குரிய புள்ளியின் அளவு | காலம் (மணித்தியாலம்) |
|---|---|---|---|---|
| 01 | கட்டடக் கலையியல் பாடம்சார் அறிவு | 100 | 40 | 03 |
| 02 | பொது வினாப் பத்திரம் | 100 | 40 | 02 |

பாட இலக்கம் 01 - கட்டடக் கலையியல் பாடம்சார் அறிவு.- இவ்வினாப்பத்திரம் கீழ்வரும் வகையில் தயார் செய்யப்பட்டிருக்க வேண்டும் :

I ஆவது மற்றும் II ஆம் பகுதிகளில் கட்டாய வினாக்கள் இரண்டிற்கும் (20 புள்ளிகள் வீதம்) மற்றைய பகுதிகள் மூன்றிலும் 6 வினாக்களில் நான்கிற்கு விடையளித்தல் வேண்டும் (15 புள்ளிகள் வீதம்).
சித்தியெய்துவதற்கான புள்ளியின் அளவு 40%

***I ஆம் பகுதி*** - அரச சேவையில் கட்டடக் கலைஞரின் பிரயோக வகிபாகம் :

(1) அரச மற்றும் தனியார் துறைகளுக்கிடையில் கட்டடக் கலையியலின் பிரயோக வித்தியாசம்
(2) கட்டடக் கலைஞர் வகிபாக பரப்பின் அனுகூலம் மற்றும் பிரதிகூலங்கள்
(3) பொது மக்கள் மீதான பொறுப்புக்கள்
(4) அமைப்பின் மீதான பொறுப்புக்கள்

*II ஆம் பகுதி -*

(1) அடிப்படை ஆய்வு மற்றும் விமர்சனம்
(2) கருதுகோள் அடிப்படையான வடிவமைப்பு மற்றும் அடிப்படை மதிப்பீட்டிற்கான அணுகுமுறை
(3) விதிகளைத் திட்டமிடல் மற்றும் கட்ட மைத்தலுடன் அவசியப்படும் அங்கீகாரங்கள் மற்றும் விளக்கங்களைப் பெற்றுக்கொள்ளல்
(4) குறித்துரைக்கப்பட்ட உள்ளூராட்சி நிறுவனங்களின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்காகத் தயாரிக்கப்பட வேண்டிய திட்டமிடல் சாதனங்கள்
(5) கட்டடக் கலையியலின் விவரமான கள திட்டமிடல் மற்றும் விவரணம்
(6) ஏனைய ஆலோசகர்களுடன் (கட்டமைப்பு திட்டமிடல் மற்றும் சேவைத் திட்டமிடல்) ஒன்றிணைந்து விவரமாகத் தகவல்களைத் தயாரித்தல்

*III ஆம் பகுதி* - அமைப்பின் நடவடிக்கைகள் மற்றும் செயற்பாட்டு ஊடகம்

(1) அமைப்பின் தொலைநோக்கு மற்றும் பணிநோக்கு
(2) அமைப்பின் வகிபாகம் மற்றும் செயற்பாடுகள்
(3) அமைப்பின் கட்டமைப்பு
(4) அமைப்பின் நடவடிக்கைகளை நிறை வேற்றும்போது அதன் ஒவ்வோர் துறையின் கடமைகள் மற்றும் பொறுப்புக்கள் மற்றும் உள்ளக தொடர்புகள்
(5) ஏனைய அரச நிறுவனங்களுடன் காணப்படும் தொடர்புகள்

*IV ஆம் பகுதி* - கருத்திட்டத்தின் முன் கட்டுமான காலத்தினுள் கருத்திட்டத்திற்கு கட்டடக் கலைஞரின் பங்களிப்பு

(1) கேள்விமனு ஆவணங்கள் மற்றும் நிறுவன மதிப்பீடு
(2) பெறுகை நடவடிக்கை வழிகாட்டுதல்கள்
(3) முன் கேள்வி (டென்டர்) கூட்டம் மற்றும் கேள்வி நடவடிக்கைகள்
(4) தொழில்நுட்ப மதிப்பீடுகள் மற்றும் கேள்வி (டென்டர்) சபையின் வகைகள்
(5) உடன்படிக்கைகள் மற்றும் ஒப்பந்தங்களைக் கையளித்தல்

*V ஆம் பகுதி* - கருத்திட்டம் இயங்கும் செயல் முறையினுள் மற்றும் ஒப்பந்தக் காலத்தின் பின்னர் கட்டடக் கலைஞர்களின் பங்களிப்பு

(1) வேலைத்தளத்தில் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம்
(2) தரக்கட்டுப்பாட்டு நடைமுறைகள்
(3) நிர்மாணப் பணிக் குழுவுடன் ஒருங் கிணைப்பை ஏற்படுத்திக்கொள்ளல்
(4) மதிப்பீடு செய்தல் மற்றும் பின் பகுப்பாய்வு நடவடிக்கைகள்
(5) பராமரிப்புக் கையேடு

*பாட இலக்கம் 02 - பொது வினாப்பத்திரம் :*

இவ்வினாப்பத்திரம் 2 மணித்தியாலங்களுக்கு வரையறுக்கப்பட்டுள்ளது. வினாப்பத்திரம் இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ளது :

***1 ஆம் பகுதி.*** - அனைத்துப் படங்களும்/ விடயங்களும் உள்ளடங்கும் வகையில் பரந்த விஞ்ஞான விடயங்கள் தொடர்பான வினாக்களைக் கொண்டுள்ளது.

***2 ஆம் பகுதி.*** - பொருளாதார, அரசியல், கலாசார மற்றும் கலை போன்ற ஏனைய சாதாரண விடயங்களுடன் தொடர்பான வினாக்களினையும் உள்ளடக்கியுள்ளது.

வினாப்பத்திரத்தின் கட்டமைப்பு :

* மேற்குறித்துரைக்கப்பட்டுள்ள வினாப் பத்திரத்திலுள்ள வினாக்கள் பல்தேர்வு வினாக்களாகவோ அரை கட்டமைக்கப்பட்ட வினாக்களாகவோ அல்லது அவற்றின் சேர்மானங்களாகவோ இருக்க முடியும்.

* சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

8.1.3 ***பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிடல்.*** - எழுத்துப் பரீட்சைக்குத் தோற்றி தகைமையடைந்த பரீட்சார்த்திகளின் திறமையின் ஒழுங்கில் தயாரிக்கப்பட்ட, அரசாங்க சேவைகள் ஆணைக் குழுவின் அறிவித்தலுக்கிணங்க குறித்துரைக்கப்பட்ட எல்லைக்கு அதிகமாக புள்ளிகளைப் பெற்ற பரீட்சார்த்திகளின் பெயர்களை உள்ளடக்கிய பெறுபேற்று அட்டவணை செயலாளர், அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவுக்கு வழங்கப்படும். பரீட்சைக்குத் தோற்றிய சகல பரீட்சார்த்திகளினதும் பெறுபேறுகள் தனிப்பட்ட வகையில் அறிவிக்க பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் தபாலில் அல்லது www.results.exams.gov.lk என்ற இணையத்தள முகவரியின் மூலம் வெளியிடப்படும்.

8.2 நேர்முகப் பரீட்சை :

8.2.1 கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை :

| பரீட்சித்துப் புள்ளிகள் வழங்கப்படும் தலைப்புக்கள் | உச்ச புள்ளி களின் அளவு | மொத்தப் புள்ளி களின் அளவு |
|---|---|---|
| 1. மேலதிக கல்வித் தகைமைகள் | | 20 |
| (i) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீ கரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து பெற்றுக்கொண்ட முதுநிலைமாணிப் பட்டம் | 10 | |
| (ii) முழுமையான தொழிற்தகைமை | 10 | |

| பரீட்சித்துப் புள்ளிகள் வழங்கப்படும் தலைப்புக்கள் | உச்ச புள்ளி களின் அளவு | மொத்தப் புள்ளி களின் அளவு |
|---|---|---|
| 2. மேலதிக தொழிற்தகைமை | | 20 |
| (i) தற்கால சேவைத் துறைக்கு உரித்துடையதாக முன்வைக்கப் பட்டுள்ள வெளியீடுகள் (அவை வெளியிடப்பட்ட ஊடகங்கள் மற்றும் ISBN இலக்கம் பெறப் பட்டுள்ளதா என உறுதிப்படுத்தல் வேண்டும் - ஒன்றிற்கு 1 புள்ளி வீதம்) | 05 | |
| (ii) தற்கால சேவைத் துறைக்கு உரித் துடைய உள்நாட்டு/ வெளிநாட்டு நிறுவனத்தில் வகித்த பதவி (குறித்துரைக்கப்பட்ட சேவைச் சான்றிதழினை முன்வைத்தல் வேண்டும் - ஒன்றிற்கு 1 புள்ளி வீதம்) | 05 | |
| (iii) தற்கால சேவைத் துறையினுள் பெற்ற விருதுகள்/ பாராட்டுக்கள் (பொது 230 மாதிரிப்படிவம் மூலம் அல்லது ஏற்றுக்கொள்ளத் தக்க சான்றிதழ் மூலம் உறுதிப் படுத்த முடியும் - ஒன்றிற்கு 1 புள்ளி வீதம்) | 05 | |
| (iv) சேவைத் துறைக்கு உரித்துடைய தாக செய்யப்பட்ட புதிய தயாரிப்பு (புதிய தயாரிப்பாக அங்கீகரிக்கப் பட்ட நிறுவனத்தின் மூலம் வெளி யிடப்பட்ட சான்றிதழ் முன்வைக் கப்படல் வேண்டும் - ஒன்றிற்கு 1 புள்ளி வீதம்) | 05 | |
| 3. தொழிற்துறை அனுபவம் | | 55 |
| (i) தனியான கட்டிடங்கள் தொடர் பான கட்டடக் கலைஞனின் செயற்பாடுகள் - வீடு - பொது அலுவலகம் (சதுர அடி 300 இலிருந்து 500 வரையான வீடுகள் மற்றும் அரசின் பொது அலுவலகக் கட்டிடங்கள்) | 15 | |
| (ii) அரை அடுக்கு மாடிக் கட்டிடம் தொடர்பான கட்டடக் கலைஞனின் செயற்பாடுகள் - வீடமைப்புத் திட்டங்கள் - கலப்பு அபிவிருத்திக் கட்டி டங்கள் (2 மாடியில் இருந்து 5 வரை) | 10 | |
| (iii) உயரமான கட்டிடங்கள் தொடர் பான கட்டிடக் கலைஞனின் செயற்பாடுகள் - வீடமைப்புத் திட்டங்கள் - கலப்பு அபிவிருத்திக் கட்டிடங்கள் (6 மாடியினைவிட அதிகமான அடுக்கு மாடிச் செயற்திட்டங்கள்) | 10 | |
| (iv) வாழ்விடம் மற்றும் பிரதான திட்டப் பணிகள் - வீடமைப்புத் திட்டங்கள் - Master Plan (பிரதான திட்டம்) - கலப்பு அபிவிருத்தி செயற் திட்டங்கள் | 10 | |
| (v) ஏனையவை - மேலதிக நிர்மாணிப்புக்கள் (உதா : கண்காட்சித் தளம்) - சமூக சேவைப் பங்களிப்பு - (Housing Clinic) - தொழில்சார் தொழிற் றுறைக்கு உரிய வேற்று பாட நெறிகள் பயின்றிருத்தல் (உதா : பசுமைக் கட்டிடம்) (குறித்துரைக்கப்பட்ட விடயங்களை உறுதிப்படுத்துவதற்காக ஏற்றுக் கொள்ளத்தக்க சான்றிதழ் களை முன்வைத்தல் வேண்டும்.) | 10 | |
| 4. நேர்முகப் பரீட்சையில் காட்டும் திறமைகள் | | 05 |
| மொத்தப் புள்ளிகள் | | 100 |

அரசாங்க சேவை ஆணைக் குழுவினால் நியமிக்கப் படும் நேர்முகப் பரீட்சை சபையின் மூலம் புள்ளிகள் வழங்கப்படுவதோடு தகைமைகள் பரீட்சித்துப் பார்க்கப்படும்.

9. **பரீட்சை நிபந்தனைகள் :**

(i) பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடைபெறும். பரீட்சார்த்திகள் விருப்பமான ஒரு மொழியில் பரீட்சைக்குத் தோற்றலாம். சகல வினாப்பத்திரங்களுக்கும் ஒரே மொழியிலேயே விடையளிக்க வேண்டும். பரீட்சார்த்தி ஒருவருக்கு தனது விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடுகின்ற பரீட்சை மொழி மூலத்தினை மாற்றம் செய்வதற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது. சகல பரீட்சார்த்திகளும் வினாப்பத்திரங்கள் இரண்டிற்கும் (2) தோற்ற வேண்டும்.

(ii) பரீட்சைக் கட்டணம் 1,000 ரூபா ஆகும். பரீட்சைக் கட்டணம் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-02-13 இற்கு வரவு வைக்கும் வகையில் நாட்டின்

எந்தவொரு தபாலகம்/ உப தபாலகங்களில் செலுத்தி விண்ணப்பதாரியின் பெயரிலேயே பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தின் உரிய இடத்தில் கழராது ஒட்டிவிடவும். இப்பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியை தம்வசம் வைத்திருப்பது பயனளிக்கும். பரீட்சைக் கட்டணமாக பணம் அல்லது முத்திரைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

(iii) பரீட்சைக்காகச் செலுத்தப்பட்ட பணம் எக்காரணம் கொண்டும் மீளளிக்கப்பட மாட்டாது.

(iv) பரீட்சை இடம்பெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

(v) பூரணமற்ற விண்ணப்பப்படிவங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

**குறிப்பு**.- விண்ணப்பதாரிகள் அனுமதிப்பத்திரமின்றி பரீட்சை மண்டபத்தினுள் பிரவேசிக்க அனுமதியளிக்கப்பட மாட்டாது. பரீட்சை ஆரம்பமாகும் தினத்தில் பரீட்சை மண்டப் பொறுப்பாளரிடம் தனது கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதிப்பத்திரத்தை மாத்திரம் ஒப்படைத்தல் வேண்டும்.

அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். இறுதித் தினத்திற்கு அல்லது அத்தினத்திற்கு முன்னர் உரிய பரீட்சைக் கட்டணத்தினைச் செலுத்தி அதற்குரிய பற்றுச்சீட்டுடன் சரியாகப் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை அனுப்பிய விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை அனுமதிப்பத்திரம் வழங்கப்படும். பரீட்சார்த்தியொருவருக்கு பரீட்சை அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவதானது அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமை கொண்டவர் எனக் கருதப்படமாட்டார்.

(vi) விண்ணப்பப்படிவம் 22 x 29 சென்றி மீற்றர் அளவில் ஏ4 கடதாசிகளில் தயாரிக்கப்பட வேண்டியதுடன், 1.0 முதல் 3.2 வரையான தலைப்புக்கள் முதற்பக்கத்திலும், 3.3 இலிருந்து 6.0 வரையான தலைப்புக்கள் இரண்டாம் பக்கத்திலும் எஞ்சியவை மூன்றாவது பக்கத்திற்கும் வருமாறு தயாரிக்கப்பட வேண்டியதோடு அதற்குரிய தகவல்கள் தமது கையெழுத்தினால் தெளிவாக எழுதப்படல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஒத்திராத விண்ணப்பப்படிவங்கள், முழுமையாகப் பூர்த்திசெய்யப்படாத விண்ணப்பப்படிவங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பத்தின் நிழற்படப் பிரதியொன்றினை வைத்திருத்தல் பிரயோசன மிக்கதாகும்.

(vii) விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றது என அறிவிக்கப்பட மாட்டாது என்பதுடன், பரீட்சை அனுமதிப்பத்திரம் அனுப்பப்பட்டவுடன் அது பற்றி பத்திரிகை அறிவித்தலொன்று வெளியிடப்படும். அறிவித்தல் வெளியிடப்பட்டு 2 அல்லது 3 நாட்கள் கடந்ததன் பின்னரும் அனுமதிப் பத்திரம் கிடைக்கப்பெறாதுவிடின் அறிவித்தலில் குறிப்பிட்டவாறு அது தொடர்பாக இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அறியப்படுத்துதல் வேண்டும். நீர் வைத்திருக்கும் விண்ணப்பத்தின் நிழற்படப் பிரதியையும், விண்ணப்பப்படிவம் பதிவுத்தபாலில் அனுப்பிய பற்றுச்சீட்டினையும், விண்ணப்பதாரி கொழும்புக்கு வெளியில் உள்ளவராயின் மேற்படி தகவல்களுடன் தொலைநகல் மூலம் பரீட்சை அனுமதிப்பத்திரப் பிரதியொன்றைத் துரிதமாகப் பெற்றுக்கொள்வதற்காக விண்ணப்பதாரியின் தொலைநகல் இலக்கத்தையும் குறிப்பிட்டு வேண்டுதல் கடிதமொன்றை அறிவித்தலில் குறிப்பிட்டுள்ள தொலைநகல் இலக்கத்திற்கு அனுப்பிவைத்து விசாரிப்பது மிகவும் பயனுள்ளதாகும்.

(viii) இப்பரீட்சையானது 2016 ஆம் ஆண்டு யூலை மாதம் கொழும்பு நகரில் மட்டும் நடாத்தப்படுவதோடு, அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அறிவுறுத்தல்களுக்குட்பட்டு இப்பரீட்சையினைப் பிற்போடுவதற்கு அல்லது இரத்துச் செய்வதற்குரிய அதிகாரம் பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு உண்டு.

(ix) பரீட்சையினை நடாத்துவது தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விடுக்கப்படுகின்ற சட்ட திட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்படுவார்கள். அச்சட்ட திட்டங்களை மீறும் சந்தர்ப்பங்களில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்படும் தண்டனைக்கு உட்படுவார்கள்.

(x) ***பரீட்சார்த்தியின் அடையாளம்***.- பரீட்சை மண்டபப் பொறுப்பாளர் திருப்தியுறுகின்ற விதத்தில் சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தில் தமது ஆள் அடையாளத்தினை உறுதிப்படுத்தல் வேண்டும். பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும் :

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை ;

(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

**கவனத்திற்கொள்ள வேண்டியவை :**

(அ) விண்ணப்பத்துடன் எந்த ஆவணங்களோ அல்லது அவற்றின் பிரதிகளையோ இணைத்தல் கூடாது.

(ஆ) நேர்முகப் பரீட்சையின்போது கேட்கப்படும் ஆவணங்களைச் சமர்ப்பிக்க முடியாத பரீட்சார்த்திகளின் விண்ணப்பப்படிவங்கள் கருத்திற்கொள்ளப்பட மாட்டாது.

(xi) அரச சேவையில்/ மாகாண சேவையில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களினால் தமது திணைக்களம்/ நிறுவனப் பொறுப்பாளர் ஊடாக விண்ணப்பப்படிவங்களை அனுப்புதல் வேண்டும். பரீட்சைக்குத் தோற்ற முன்னர் சகல விண்ணப்பதாரிகளும் அவர்களது கையொப்பத்தை தாம் சேவையாற்றும் நிறுவனத்தின் தலைவர் மூலம் உறுதிப்படுத்தல் வேண்டும்.

10. இந்த வர்த்தமானி அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிக் கருத்துக்களில் ஏதேனும் முரண்பாடுகள் தோன்றின், அவ்வேளை சிங்கள மொழிக் கருத்தே மேலோங்கி நிற்க வேண்டும்.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

ஜே. தடல்லகே,
செயலாளர்,
பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு.

பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு,
2016, மாச்சு.

மாதிரி விண்ணப்பப்படிவம்

(அலுவலக உபயோகத்திற்கு)

**இலங்கை கட்டடக் கலைஞர் சேவையின் III ஆம் தரத்திற்கு சேர்த்துக்கொள்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை (2015)**

Limited Competitive Examination for Recruitment to Grade III of Sri Lanka Architectural Service - (2015)

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :
சிங்களம்-2, தமிழ்-3, ஆங்கிலம்-4)
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக.)

* விண்ணப்பப்படிவத்தினை நிரப்பவேண்டியது பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலத்திலாகும்.

1. தனிப்பட்ட தகவல்கள் :

1.1 முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
(உதாரணம் : HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)

1.2 முதலெழுத்துக்களுடன் பெயர், முதலெழுத்துக்களை இறுதியில் எழுதுக (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) : ----.
(உதாரணம் : GUNAWARDHANA, H. M. S. K.)

1.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) :----.

1.4 தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :

2. 2.1 நிரந்தர முகவரியினை (ஆங்கில பெரிய எழுத்துக் களில்) :----.
(இம்முகவரிக்கு பரீட்சை அனுமதிப்பத்திரம் அனுப்பப் படும்.)

2.2 நிரந்தர முகவரி (சிங்களத்தில்/ தமிழில்) :----.

3. 3.1 பால் (ஆண்/ பெண்) :
ஆண்-0, பெண்-1
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக.)

3.2 தேசிய இனம் :
சிங்களவர்-1, தமிழர்-2, இந்தியர் தமிழர்-3, முஸ்லிம்-4, ஏனையோர்-5)
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக.)

3.3 பிறந்த திகதி :

ஆண்டு : மாதம் : திகதி :

3.4 விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதிக்கு வயது :

வருடங்கள் : மாதங்கள் : நாட்கள் :

3.5 விவாகமானவர்/ விவாகமாகாதவர் :
(விவாகமானவர்-1, விவாகமாகாதவர்-2)
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக.)

3.6 தொலைபேசி இலக்கம் :

கையடக்கத் தொலைபேசி

நிலையான

3.7 மின்-அஞ்சல் முகவரி :----.

4. வர்த்தமானி அறிவித்தலில் 7 ஆம் பந்தியில் குறித்துரைக்கப்பட்ட திணைக்களத் தரத்தில் உமது சேவை மற்றும் தரம் (வகுப்பு, தரம் அல்லது வகுதி (இருப்பின்) அதனைக் குறிப்பிடல் வேண்டும். தகைமைகளைப் பெற்றுத்தரும் சேவை/ தரம் ஒன்றிற்கு அதிகமான எண்ணிக்கையில் நீர் சேவையாற்றியிருப்பின் அச்சேவை மற்றும் தரத்தின் திகதிகளுடன் குறிப்பிடல் வேண்டும்) :

4.1 தற்போது வகிக்கும் பதவி :----.
4.2 பதவிக்குரியதான சேவை (அரச சேவை/ மாகாண அரச சேவை) :----.
4.3 தரம் :----.
4.4 வகுப்பு/ வகுதி :----.
4.5 பதவியை ஏற்ற திகதி :----.
4.6 அப்பதவியில் நிரந்தரம் செய்யப்பட்ட திகதி :----.
4.7 பட்டம் செல்லுபடியாகும் திகதி :----.

5. வர்த்தமானி அறிவித்தலில் 7 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள சேவைகள்/ தரங்களில் விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு நிரந்தர/ தொடர்ச்சியான முழுமையான சேவைக்காலம் :----.

6. பற்றுச்சீட்டினை சரியாக இங்கு ஒட்டவும் :

பற்றுச்சீட்டு இலக்கம் :----.
செலுத்திய அலுவலகம் :----.
திகதி :----.

7. விண்ணப்பதாரியின் உறுதியுரை :

2015 ................. மாதம் ................. திகதிக்கு முன்னைய ஐந்து வருடங்களினுள் (சேவை அல்லது திணைக்களப் பரீட்சையினை சித்தியெய்துவது நிபந்தனையாகக் காணப்படும் சம்பள ஏற்றங்கள் தவிர) உத்தியோகத்தரின் சம்பள ஏற்றங்கள் அனைத்தினையும் சம்பாதித்துள்ளார் என்றும், அக்காலத்தினுள் செய்த குற்றத்திற்கு (கண்டிப்பினைத் தவிர) எவ்வித ஒழுக்காற்றுத் தண்டனைகளுக்கும் அவ்வுத்தியோகத்தர் உட்படவில்லை எனவும் குறிப்பிடுகின்றேன். மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சையில் தோற்றுவதற்கு தாம் தகைமையுடையவர் எனவும், பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட ........................................ ஆம் இலக்கம் ........................ ஆந் திகதியுடைய பற்றுச்சீட்டினை இதனுடன் ஒட்டியுள்ளதாகவும் உறுதி கூறுகின்றேன். மேலும் இப்பரீட்சையின் நிபந்தனைகளுக்கு இணங்க நான் தகைமையற்றவர் எனத் தெரிந்தால், பரீட்சைக்கு முன் அல்லது தோற்றும்போது அல்லது அதன் பின்னர் தோற்றுவதற்கு அனுமதியளிக்கப்படமாட்டேன் என்ற தீர்மானத்திற்கு நான் உடன்படுகிறேன். மேலும் இப்பதவிக்குத் தெரிவுசெய்யப்பட்டதன் பின்னர் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் பிழை அல்லது உண்மைக்குப் புறம்பானது என்று தெரியவரின் நட்டஈடு செலுத்தாமல் என்னை சேவையிலிருந்து பதவியிறக்கம்

செய்வதற்கும், அவ்வாறே பரீட்சை நடாத்துதல் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விடுக்கப்படுகின்ற சட்டதிட்டங்கள் மற்றும் பெறுபேற்றினை வெளியிடுதல் தொடர்பாக எடுக்கப்படும் தீர்மானங்களுக்கு கட்டுப்படுவதாகவும் உறுதியளிக்கின்றேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

8. திணைக்களத் தலைவரின உறுதியுரை (பிரத்தியேக கோவைக்கு ஏற்ப) :

இவ்விண்ணப்பப்படிவத்தினை முன்வைக்கும் .......................... .............. திரு./ திருமதி/ செல்வி .................. ஆந் திகதியன்று பூர்த்தியான 5 வருடங்களுக்குள் (சேவை அல்லது திணைக்களப் பரீட்சையினை சித்தியெய்துவது நிபந்தனையாகக் காணப்படும் சம்பள ஏற்றங்கள் தவிர) உத்தியோகத்தரின் சம்பள ஏற்றங்கள் அனைத்தினையும் சம்பாதித்துள்ளார் என்றும், அக்காலத்தினுள் செய்த குற்றத்திற்கு (கண்டிப்பினைத் தவிர) எவ்வித ஒழுக்காற்றுத் தண்டனைகளுக்கும் அவ்வுத்தியோகத்தர் உட்படவில்லை எனவும், இவ்விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள், அறிகை சார்பிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டது எனவும், குறித்த வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு ஏற்ப அவ்வுத்தியோகத்தர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமையுடையவராகவும் குறித்த பரீட்சைக் கட்டணத்தினைச் செலுத்தி அதற்கான பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளதாகவும் இப்பதவிக்காகத் தேர்ந்தெடுக்கப்படும் பட்சத்தில் இந்நிறுவன சேவையிலிருந்து விடுவிக்கத் தேவையான நடவடிக்கை மேற்கொள்ள முடியும் என உறுதிப்படுத்துகிறேன்.

----,
திணைக்களத் தலைவர்/ அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்.

திணைக்களத் தலைவரின்/ அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரின் பெயர் :----.
பதவியின் பெயர் :----.
(பதவி முத்திரை மூலம் உறுதிப்படுத்தவும்) :
திகதி :----.

4-289

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**

**2013 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**

**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை"**

**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது.)**

**எல்லா வர்த்தமானிகளையும் www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித் தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும். தபால் அலுவலகம், "பொரல்லை" என்பதே மணி ஓடர்களுக்கான செலுத்தப்படும் அலுவலகமாகும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் 'சுப்றீம் கோட்' புறொக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூபா ச. |
|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 13700 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதிக்கும் | 13700 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரை பக்கம் | 1,30000 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 2,60000 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் "அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8" அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பெறப்படாமை, முகவரி மாற்றம் போன்ற எல்லாத் தொடர்புகளுக்கும், கொழும்பு 8, அரசாங்க அச்சுத் திணைக்களம், அரசாங்க அழுத்தகருக்கே எழுதுங்கள்.**

14. **2013 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | முழு வருடத்திற்கு மான கட்டணம் ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வதுதொகுதி | 4,160.00 | 9,340.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 580.00 | 950.00 |
| III வது தொகுதி (ஆக்க உரிமை மற்றும் வியாபார உரிமை அடையாள விளம்பரங்கள் முதலியன) | 405.00 | 750.00 |
| I வது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 890.00 | 2,500.00 |
| II ஆவது பகுதி (சட்ட சம்பந்தமானது) | 860.00 | 450.00 |
| III வது பகுதி (காணிகள்) | 260.00 | 275.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 2,080.00 | 4,360.00 |
| V வது பகுதி (பயண போக்குவரத்து சேவை முதலிய விண்ணப்பங்களுக்கான பட்டியல் மற்றும் புத்தகப் பட்டியல்) | 1,300.00 | 3,640.00 |
| VI வது பகுதி (யூரிமார் பெயர்ப்பட்டியல், வைத்திய அலுவலர் பட்டியல், பிறப்பு, இறப்பு பதிவாளர் பட்டியல் முதலியன) | 780.00 | 1,250.00 |
| அதிவிசேட வர்த்தமானி | 5,145.00 | 5,520.00 |

**முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.**

**தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | ரூபா ச. விலை ரூபா ச. | ரூபா ச. தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வதுதொகுதி | 4,160.00 | 9,340.00 |
| I வது தொகுதி | 40.00 | 60.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 25.00 | 60.00 |
| III வது தொகுதி | 15.00 | 60.00 |
| I வது பகுதி (I, II, III தொகுதிகள் உட்பட) | 80.00 | 120.00 |
| II வது பகுதி | 12.00 | 60.00 |
| III வது பகுதி | 12.00 | 60.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 23.00 | 60.00 |
| V வது பகுதி | 123.00 | 60.00 |
| VI வது பகுதி | 87.00 | 60.00 |

**எல்லா தனிப்பிரதிகளையும் கொழும்பு 5, பொல்ஹேன்கொடை, கிருளப்பனை மாவத்தை, இல. 163 எனும் முகவரியிலுள்ள அரச வெளியீட்டு பணியகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.**

# வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

**அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.**

**முக்கிய கவனிப்பு.**- இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான கட்டணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.**

**அட்டவணை-2016**

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **ஏப்பிறல்** | .. | வெள்ளி | 01.04.2016 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 18.03.2016 |
| | | வெள்ளி | 08.04.2016 | .. | நண்பகல் 12 | வியாழன் | 24.03.2016 |
| | | வெள்ளி | 15.04.2016 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 01.04.2016 |
| | | வெள்ளி | 22.04.2016 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 08.04.2016 |
| | | வெள்ளி | 29.04.2016 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 15.04.2016 |
| **மே** | .. | வெள்ளி | 06.05.2016 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 22.04.2016 |
| | | வெள்ளி | 13.05.2016 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 29.04.2016 |
| | | வெள்ளி | 20.05.2016 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 06.05.2016 |
| | | வெள்ளி | 27.05.2016 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 13.05.2016 |
| **யூன்** | .. | வெள்ளி | 03.06.2016 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 20.05.2016 |
| | | வெள்ளி | 10.06.2016 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 27.05.2016 |
| | | வெள்ளி | 17.06.2016 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 03.06.2016 |
| | | வியாழன் | 24.06.2016 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 10.06.2016 |

**டபிள்யூ. ஏ. ஏ. ஜீ. பொன்சேக்கா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2016 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.